புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | பிப்ரவரி 11, 2021 | புரட்சி 20 | முழக்கம் 5 | விலை: ரூ.3.00

## இளைய தலைமுறையினருக்கு இளைஞர்கள் வகுப்பு எடுத்த பெரியாரியல் பயிற்சி முகாம்

*இளைய தலைமுறையினருக்கு பெரியாரியலை அறிமுகப்படுத்தும் பயிற்சி வகுப்புகள் மேட்டூரில் 2021, பிப். 6, 7 தேதிகளில் தாய்த் தமிழ்ப் பள்ளி அரங்கில் சிறப்புடன் நடந்தன. இரு நாள் பயிற்சி வகுப்பிலும் 50 மாணவிகள், மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் பங்கேற்றனர்.*



முதல் நாள் பயிற்சி வகுப்பை கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தொடங்கி வைத்தார். வாழ்க்கையில் முக்கியமான இளமைக் காலத்தில் பதிய வைக்கும் சிந்தனைகள் மானுட வாழ்க்கையில் மிகவும் முக்கியமானவையாகும். இன்றைய சமூகச் சூழல் இளைஞர்களைக் குழப்பக் கூடியதாகவும் பல நேரங்களில் சமூக விரோதிகளாக செயல்படவும் தூண்டுகின்றன. சிலர் ஜாதி சங்கங்களிலும் சிலர் பொழுது போக்கு கேளிக்கைகளிலும் மூழ்கி விடுகிறார்கள். நேர்மையான சமூகக் கவலையுள்ள சமூக மாற்றத்துக்கு பங்களிப்புகளை வழங்கக் கூடிய இளைஞர்களாக உருவாவதற்கு உரிய சிந்தனைகளை நாம் சிந்தனையில் ஏற்றிக் கொள்ள வேண்டும். பெரியார் சிந்தனைகள் வாழ்க்கைக்கான இலட்சியத்தையும் மானுடப் பண்புகளையும் சுயமரியாதை உணர்வுகளையும் பகுத்தறிவையும் பெண்களை சமமாக ஏற்கும் சமத்துவ சிந்தனைகளையும் வலியுறுத்துகிறது. அது குறித்த சிந்தனைகளை இங்கே பகிர்ந்து கொள்வதற்கு இந்த பயிற்சி வகுப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உங்கள் வாழ்க்கைப் பயணத்தில் இந்த இரண்டு நாட்களும் முக்கியத்துவம் பெற்றவையாகும் என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து தமிழ்நாடு அறிவியல் மன்ற தலைவர் ஆசிரியர் சிவகாமி, பயிற்சி வகுப்பின் நெறிமுறைகளை எடுத்துரைத்தார். சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் சி. கோவிந்தராஜ், ஜாதி ஒழிப்புப் பாடல் பாடி வரவேற்றுப் பேசினார். தமிழ்நாடு மாணவர் கழகத்தைச் சார்ந்த இளைஞர்களே இந்தப் பயிற்சிகளை அளித்தது இம் முகாமின் சிறப்பு. முதல் நாள் ‘திராவிடத்தால் எழுந்தோம்’ என்ற தலைப்பில் திருச்செங்கோடு மனோஜ், ‘தனக்கென வாழாத் தலைவர் பெரியார்’ எனும் தலைப்பில் மேட்டூர் மதிவதனி, ‘கடவுளைப் பகுத்தறிவோம்’ எனும் தலைப்பில் திருப்பூர் சந்தோஷ் ஆகியோர் வகுப்புகளை எடுத்தனர்.

உணவு இடைவேளைக்குப் பிறகு கோவை விஷ்ணு, பயிற்சியாளர்களுடன் கலந்துரையாடினார். தொடர்ந்து திருப்பூர் இரண்யா ‘வீடு மட்டுமா பெண்கள் உலகம்?’ எனும் தலைப்பிலும், பொள்ளாச்சி சபரி ‘பரப்புரையின் தேவையும் அவசியமும்’ எனும் தலைப்பிலும் வகுப்புகளை எடுத்தனர். ‘காணொளி’த் திரைகளைப் பயன்படுத்தி வகுப்புகள் எடுக்கப்பட்டன. மாலையில் பயிற்சியாளர்கள் பங்கேற்ற அறிவுத் திறன் போட்டிகள், விளையாட்டுகள் நடைபெற்றன. ஆசிரியர் சிவகாமி ஒருங்கிணைத்தார்.

இரண்டாம் நாள் காலை சேலம் யாழினி, ‘இடஒதுக்கீடு-ஓர் அறிமுகம்’ எனும் தலைப்பிலும், திருப்பூர் சிவகாமி ‘புரட்சியாளர் அம்பேத்கர் பணிகள்’ எனும் தலைப்பிலும், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ’மதவாதத்தின் ஆபத்துகள்’ எனும் தலைப்பிலும் வகுப்புகளை எடுத்தனர். உணவு இடைவேளைக்குப் பிறகு தலைமைக் குழு உறுப்பினர் மடத்துக்குளம் மோகன் ‘மந்திரமல்ல தந்திரமே’ எனும் தலைப்பில் மந்திரவாதிகள், சாமியார்கள் நிகழ்த்தும் ‘அற்புத மோசடி’களை செய்முறையாக நடத்திக் காட்டி, அறிவியல் விளக்கங்களோடு உரையாற்றினார். தொடர்ந்து பெரியாரின் தேவைகள் எனும் தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி வகுப்பு எடுத்தார்.

நிறைவாக பங்கேற்பாளர்கள் பயிற்சியில் பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். பயிற்சி யாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. குழு வாக அனைவரும் ஒளிப்படம் எடுத்துக் கொண்டனர்.

பெரியாரியல் குறித்து இதுவரை அறிய வாய்ப்பில்லாத இளைஞர்கள், மாணவர்களுக்கு மட்டும் இந்தப் பயிற்சி வகுப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. தங்களுக்கு நல்ல விளக்கங்கள் கிடைத்ததாக பயிற்சியாளர்கள் கூறினர்.

சேலம் மேற்கு மாவட்டக் கழகம் ஏற்பாடு செய்த இந்த இரண்டு நாள் பயிற்சி நிகழ்வுகளையும் ஆசிரியர் சிவகாமி ஒருங்கிணைத்தார். தமிழ்நாடு மாணவர் கழக சேலம் மேற்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மேட்டூர் ஆர்.எஸ். நாகராஜ் நன்றி கூறினார். மேட்டூர், மேட்டூர் ஆர்.எஸ்., கொளத்தூர், மேச்சேரி, காவலாண்டியூர், நங்கவள்ளி பகுதிகளைச் சார்ந்த இளைஞர்கள் பயிற்சிகளைப் பெற்றனர்.

**– நமது செய்தியாளர்**

## மானாட, மயிலாட

**(சசிகலா, ஊழல் வழக்கிலிருந்து தண்டனைப் பெற்று விடுதலையாகி வருவதைக் கொண்டாடி மகிழ்வதைக் கண்டு குமுறி ஒரு வாசகர் மின்னஞ்சல் வழியாக அனுப்பியது.)**

*தாய்த் திருநாட்டை*
*தளை கொண்ட எதிரியை*
*மூண்டெழுந்த போரில்*
*வீழ்த்தி வாகை சூடி*
*வீதிவலம் வருகின்ற*
*வெற்றித் திருவுருவை*
*வாழ்த்தி வரவேற்க*
*முழங்கிடு சங்கே! ஆடிடு மயிலே!*

*அரண்மனை நீங்கி*
*அரியணை துறந்து*
*கானகம் ஏகி*
*கடுந்தவம் புரிந்து*
*மானுட வாழ்வின்*
*துக்கம் நீங்க*
*மருந்தொன்று தாங்கி*
*போதிமரத்து மனிதர் வருகிறார்*
*கொட்டுக பறையே! கூவிடு குயிலே!*

*எங்கோ பிறந்து வளர்ந்து*
*இங்கு வந்து, ஏழையின் துயர்கண்டு*
*பசி, பட்டினி பாழ்நோய் போக்க*
*தனித்த நின்று தவ வாழ்க்கைக் கொண்டு*
*ஃ(க) என இரந்து இழிமொழி சுமந்து*
*தள்ளா வயதிலும் உலகம் சுற்றி*
*நிதி திரட்டி விழிநீர் துடைக்கும்*
*ஏந்தல் வருகிறார்*
*மகுடமே ஒலித்திடு! மான்களே ஆடுங்கள்!*

*சாதி மத பேதம் மாய்த்திட*
*சாமானியனின் முதுகு நிமிர்ந்திட*
*(தன்) வாழ்நாளெல்லாம் போராடி*
*வீழ்ந்து கிடந்த மானுடத்தை*
*வெளிச்சப் பாதைக்கு அழைத்து வரும்*
*தீரம் மிக்க அறப்போராளி*
*(நம்) திசை நோக்கி வருகிறார்*
*மேகங்களே பொழியுங்கள்!*
*மலர்களே சிரியுங்கள்!*

**– பிரியங்கா**

## இறுதி ஊர்வலத்தில் பங்கேற்றாலே ‘ஊபா’ சட்டத்தை ஏவுவதா? கழகத் தலைவர் கண்டனம்

*கடந்த 2019ஆம் ஆண்டு அக்டோபர் 28ஆம் தேதி கேரள மாநிலம் அட்டப்பாடி அருகே வனப்பகுதியில் கேரள போலீசாரால் நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் சேலம் மாவட்டம் ஓமலூரை அடுத்த கணவாய்ப்புதூர் கிராமத்தைச் சேர்ந்த மணிவாசகம் என்பவர் கொல்லப்பட்டார்.*

*அவரது உடல் சொந்த ஊரான கணவாய்புதூரில் கடந்த 2019ஆம் ஆண்டு நவம்பர் 15ஆம் தேதி தகனம் செய்யப்பட்டது. அந்த இறுதி நிகழ்வில் கலந்து கொண்டமைக்காக தோழர்கள் சிலர் மீது சட்ட விரோத செயல்பாடுகள் தடுப்புச் சட்டம் உள்ளிட்ட சில பிரிவுகளில் தமிழக அரசு வழக்குப் பதிவு செய்தது. அவர்கள் மீது மாவோயிஸ்ட்டுக்கு ஆதரவாகவும், அரசுக்கு எதிராகவும் முழக்கங்களை எழுப்பியதாக புகார் எழுப்பப்பட்டது.*

*இந்நிலையில் சேலத்தில் 07.02.2021 அன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.30 மணி அளவில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி பொதுச் செயலாளர் பாலன் (41), தமிழ் தேசிய மக்கள் முன்னணி மாவட்ட தலைவர் சீனிவாசன் (66) இருவரும் தீவட்டிப்பட்டி காவல்துறை அதிகாரிகளால் அடக்குமுறை ‘ஊபா’ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.*

*சமூக விரோத வன்முறை காவி கும்பல்கள் சர்வ சுதந்திரமாக இயங்க அனுமதிக்கும் பாஜக அதிமுக அரசுகள், தோழர் ஒருவரின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டார்கள் என்ற காரணத்திற்காக மிகக் கொடும் சட்டத்தின் கீழ் மனித உரிமை செயல்பாட்டாளர்களை கைது செய்து சிறையில் அடைத்திருப்பது கடும் கண்டனத்திற்கு உரியது.*

*இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் பிணையில் வர முடியாது. விசாரணை வாரியம் முன் நிறுத்தி சட்டம் சரியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறதா என்பதை விசாரிக்கும் உரிமையும் கிடையாது.*

*பாஜக – அதிமுக அரசுகள், காவி பாசிசம் வீழ்த்தப்பட களத்தில் நின்ற தோழர்களின் விடுதலைக்கு குரல் கொடுப்போம்.*

*தோழர்கள் மீது பொய்யாக போடப்பட்டுள்ள கொடுஞ்சட்டங்களை திரும்பப் பெற தமிழக அரசை வலியுறுத்துவோம்.*

*தமிழக அரசே, தோழர் பாலன், சீனிவாசன் மீது போடப்பட்டுள்ள ஊபா சட்ட வழக்கை திரும்பப்பெறு! அவர்களை உடனடியாக விடுதலை செய் !*

தலையங்கம்

# தமிழக அரசியல் அவலங்கள்

‘பொது மக்களிடம் பெரிதும் புத்தியும் இல்லை; ஒழுக்கமும் இல்லை; மானமும் இல்லை என்ற நிலை இருப்பதால் எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஆளும் கட்சியும் வயிற்றுப் பிழைப்புக்கும் பொது நல வேடம் போட்டுக் கொண்டு திரியும் எந்த அரசியல் கட்சியும் திருந்துவதற்கு வகையே இல்லாமல் போய்விட்டது.’’ – இது 1959ஆம் ஆண்டு பெரியார் ‘விடுதலை’யில் எழுதிய அரசியல் குறித்த மதிப்பீடு. சுமார் 60 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. ஆனாலும் தமிழ்நாட்டில் கட்சி அரசியல் – தேர்தல்அரசியல் – மாண்புகள் மேலும் மேலும் சீரழிந்து கொண்டே இருக்கின்றன. தமிழ்நாட்டில் இப்போது எம்.ஜி.ஆர். தொடங்கிய ‘அ.இ.அ.தி.மு.க.’வில் நடக்கும் அரசியல் நிகழ்வுகள் தமிழகத்தையே தலைகுனியச் செய்துள்ளன என்ற உண்மையை மறுக்கவே முடியாது.

இந்தியாவிலேயே முதலமைச்சராக பதவியில் இருந்த காலத்தில் வருமானத்துக்கு அதிகமாக ஊழல் செய்து சொத்துக்களைக் குவித்த வழக்கில் தண்டிக்கப்பட்டவர் – முடிவெய்திய முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஒருவர் மட்டுமே. சிறைத் தண்டனையோடு 100 கோடி அபராதமும் விதிக்கப்பட்டு உச்ச நீதிமன்றமும் உறுதி செய்தது. உடல் நலிவுற்ற நிலையில் ‘குற்றவாளி’ யாகவே அவர் முடிவெய்தினார். எனவே அவர் தண்டிக்கப்பட முடியாத நிலையில் சட்டபூர்வமாக விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அவருக்கு தமிழக அரசு சார்பில் நினைவிடம் கட்டப்பட்டுள்ளது. இதற்கு அரசுப் பணம் ரூ.90 கோடி அளவில் செலவிடப்படுகிறது. அரசு விளம்பரங்களில் அவரது படம் வெளியிடப்படுகிறது. அவர் வாழ்ந்த இல்லம் அரசு செலவில் நினைவிடமாக்கப்படுகிறது. பிறப்பால் ‘பிராமணராக’ இருந்த காரணத்தால் இவைகள் விவாதத்துக்கு வராமலே கள்ள மவுனம் காக்கப்படுகிறது. அரசியல் கெட்டுப்போய் விட்டது என்று புலம்பும் பார்ப்பனிய ஊடகங்கள், பார்ப்பனிய தலைவர்கள் – இதைக் கண்டு கொள்ளாமல் கடந்து போகிறார்கள். ஜெயலலிதாவுடன் இந்த வழக்கில் இணைக்கப்பட்ட சசிகலா மற்றும் அவரது உறவினர்கள் முறைகேடாக சொத்துக்களை வாங்கிக் குவித்த வழக்கில் தண்டிக்கப்பட்டு, 4 ஆண்டுகள் சிறைத் தண்டனையை உச்சநீதிமன்றம் உறுதி செய்தது. ஒவ்வொருவருக்கும் ரூ.10 கோடி அபராதமும் விதிக்கப்பட்டது. இவர்கள் எந்த அரசுப் பதவியிலும் இல்லாதவர்கள். இப்போது ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டு சிறையிலிருந்து விடுதலையாகியுள்ள ஜெயலலிதாவின் தோழி சசிகலாவை ‘தியாகத் தலைவி’ என்று கூறி உற்சாக வரவேற்பு தரப்படுகிறது.

ஜெயலலிதா முடிவெய்தியதைத் தொடர்ந்து கட்சியின் பொதுச் செயலாளர் பொறுப்பை அம்மையார் சசிகலா ஏற்றார். இப்போது முதல்வராக இருக்கும் எடப்பாடி பழனிச்சாமி, அவரது அமைச்சரவை சகாக்கள் கட்சியின் பொறுப்பாளர்கள் அனைவரும் அம்மையார் சசிகலாவை பதவி ஏற்குமாறு வேண்டுகோள் விடுத்து தீர்மானங்களையும் நிறைவேற்றினார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் கூடி முதல்வர் பதவிக்கும் தேர்வு செய்தார்கள். ஆனால் பதவி ஏற்க விடாமல் நடுவண் பா.ஜ.க. ஆட்சி தமிழகத்தின் ஆளுநர் அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி இழுத்தடித்தது. இந்த நிலையில் உச்சநீதிமன்றம் ஏற்கனவே பெங்களூர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உறுதி செய்தது. அம்மையார் சசிகலா, சிறைக்குச் செல்ல வேண்டிய நிலையில், தன்னிடம் விசுவாசமாக இருப்பார் என்ற நம்பிக்கையில் எடப்பாடி பழனிச்சாமியை தனக்கு பதிலாக முதல்வராக்கினார்.

ஏற்கனவே அரசுக்கு சொந்தமான டான்சி நிறுவனத்தின் இடங்களை முதல்வராக இருந்த ஜெயலலிதா முறைகேடாக வாங்கிய வழக்கு ஒன்றை சந்தித்தார். அரசுப் பதவியில் இருப்பவர்கள் அரசுக்கு சொந்தமான இடங்களை வாங்குவது சட்டப்படி குற்றம். அம்மையார் ஜெயலலிதா அதை மீறிய நிலையில் உச்சநீதிமன்றம் விசித்திரமான ஒரு தீர்ப்பை வழங்கியது. ‘‘முதல்வர் செய்தது குற்றம் தான்; ஆனாலும் தண்டனையை அனுபவிக்க வேண்டாம்; அரசு நிலத்தை திருப்பி ஒப்படைத்தால் போதும்’’ என்று நீதிமன்ற வரலாற்றிலேயே இல்லாத ஒருதீர்ப்பு வழங்கப்பட்டது. அந்த வழக்கு நடந்த காலங்களில் முதல்வராக தொடர முடியாத நிலையில் ஓ. பன்னீர்செல்வம் முதல்வராக தற்காலிகமாக நியமிக்கப்பட்டார். ஜெயலலிதா வாங்கிய நிலங்களை அரசிடம் ஒப்படைத்துவிட்டு இந்த வழக்கிலிருந்து ஒரு வழியாக தன்னை விடுவித்துக் கொண்டு மீண்டும் முதல்வராக பதவி ஏற்க வந்தார். ஓ. பன்னீர்செல்வம், முதல்வர் பதவியிலிருந்து விலகி, அம்மையாருக்கு வழி விட்டார். முதல்வர் பதவியில் இருக்கும் போதே ஜெயலலிதா, முடிவெய்திய நிலையில் அவசர இடைக்கால ஏற்பாடாக மீண்டும் ஓ. பன்னீர்செல்வம் முதல்வராக்கப்பட்டார். அம்மையார் சசிகலா, தன்னை முதல்வர் பதவிக்கு தயார் செய்து கொண்டிருந்தபோது சிறை செல்ல வேண்டிய நிலையில் முதல்வர் பதவியை ஓ. பன்னீர்செல்வத்துக்கு வழங்காமல், எடப்பாடி பழனிச்சாமியிடம் வழங்கிவிட்டார். கட்சியை தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள தனது உறவினர் தினகரனை கட்சியின் துணைப் பொதுச் செயலாளராக்கிவிட்டு சிறைச் சென்றார்.

குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும் அரசியலை நடத்திவரும் பா.ஜ.க., அ.இ.அ.தி.மு.க.வைப் பிளவுபடுத்தி ஒரு பகுதியை தன் வசமாக்க சதி செய்தது. அந்த வலையில் சிக்கிய ஓ. பன்னீர்செல்வம் முதல்வர் பதவி கிடைக்காத ஏமாற்றத்தில், எடப்பாடி பழனிச்சாமி ஆட்சிக்கு எதிராக ‘தர்மயுத்தம்’ நடத்தப் போவதாக தனிக்கட்சி தொடங்கினார். 11 சட்டமன்ற உறுப்பினர் மற்றும் ஆதரவாளர்களுடன் தனிக்கட்சி தொடங்கி சட்டமன்றத்தில் எடப்பாடி பழனிச்சாமி கொண்டு வந்த ‘நம்பிக்கை வாக்கெடுப்பு’ தீர்மானத்தில் எடப்பாடி ஆட்சிக்கு எதிராக 11 அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களுடன் வாக்களித்தார்.

ஓ.பி.எஸ். ‘தர்மயுத்த’ கட்சிக்கு செல்வாக்கு இல்லை என்று ஒரு கட்டத்தில் புரிந்து கொண்ட பா.ஜ.க., மீண்டும் இரு பிரிவினரையும் ஒன்றாக இணைக்க வைத்தது. ‘தர்மயுத்தம்’ நடத்திய காலத்தில் தன்னை முதல்வராக்காத சசிகலாவை வஞ்சம் தீர்க்க ஜெயலலிதா மரணத்தில் மர்மம் இருக்கிறது என்று கூறி நீதிபதி ஆறுமுகம் விசாரணை ஆணையத்தை நியமித்தவரும் ஓ. பன்னீர்செல்வம் தான். ‘ஓ.பி.எஸ். – ஈ.பி.எஸ்.’ இணைந்த பிறகு – ஆட்சிக்கு எதிராக வாக்களித்த 11 அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சித் தாவல் தடை சட்டத்திலிருந்து பதவி பறிபோகாமல் காப்பாற்றப்பட்டனர். அந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் அப்படியே கிடப்பில் போடப்பட்டு விட்டது.

ஜெயலலிதா, மரணத்தில் மர்மம் இருக்கிறது என்று விசாரணை ஆணையம் அமைத்த ஓ. பன்னீர்செல்வம், 8 முறை விசாரணை ஆணையம் சாட்சி சொல்ல அழைப்பாணை விடுத்தும் சாட்சி சொல்ல வரவில்லை. தொடர்ந்து இணைந்த இரு பிரிவினரும் பொதுக் குழுவைக் கூட்டி அம்மையார் சசிகலாவை கட்சியிலிருந்து நீக்கினர். பொதுக் குழுவைக் கூட்டும் அதிகாரம் பொதுச்செயலாளராக தனக்கு மட்டுமே உண்டு; அந்தப் பொதுக் குழுவே சட்ட விதிகளுக்கு உட்பட்டது அல்ல என்று சசிகலா வழக்கு தொடர்ந்தார். வழக்கு நிலுவையில் உள்ளது.

இப்போது எடப்பாடி பழனிச்சாமி, கட்சிக்குள் பதவியைப் பயன்படுத்தி மீண்டும் முதலமைச்சர் வேட்பாளராக தன்னை உறுதிப்படுத்திக் கொண்ட நிலையில், சசிகலாவுக்கும், அ.இ.அ.தி.மு.க.வுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்கிறார். அவருடன் தொடர்பு வைத்துக் கொண்டவர்களை கட்சியை விட்டு நீக்குகிறார். தன்னை முதல்வராக்கியது அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களே தவிர, சசிகலா அல்ல என்கிறார்.

உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி சசிகலாவுடன் சேர்ந்து தண்டனை பெற்று விடுதலையாகியுள்ள சுதாகர், இளவரசி சொத்துக்களை பறிமுதல் செய்யும் உத்தரவுகளை எடப்பாடி பழனிச்சாமி பிறப்பித்துள்ளார். இதை சட்டப்படி ஜெயலலிதாவின் கொடைக்கானல் மாளிகை, சிறுதாவூர் பங்களாக்களையும் பறிமுதல் செய்திருக்க வேண்டும். ஆனால் அதைச் செய்யத் தயாராக இல்லை. பா.ஜ.க. உத்தரவு போட்டால் செய்யத் தயங்க மாட்டார்கள். இப்போது சசிகலா ஆதரவு அணி – எதிர்ப்பு அணி என்று கட்சிக்குள் கடும் ‘யுத்தம்’ நடக்கிறது. இந்த ‘பொம்மலாட்டத்தை’ திரைமறைவிலிருந்து பா.ஜ.க. அரங்கேற்றிக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் உரிமைகளையும் தமிழகத்தின் தனித்துவங்களையும் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியிடம் அடகு வைத்துவிட்டு, ஆட்சி அதிகாரத்தை மட்டும் தக்க வைத்துக் கொள்ளும் துரோகங்களை அடுக்கடுக்காக செய்து கொண்டிருப்பதே அ.இ.அ.தி.மு.க.வின் ‘அரசியல்’ என்றாகிவிட்டது. எந்தக் கொள்கையும் வேண்டாம்; ‘இரட்டை இலை’ என்ற சின்னம் மட்டுமே போதும் என்கிறார்கள். மறைந்த எம்.ஜி.ஆர். திரைப்படங்களில் கதாநாயகனாக நடித்தபோது திரைப்படப் பாடலாசிரியர்கள் எழுதிக் கொடுத்த பாடல்தான் தங்களின் கொள்கை என்கிறார்கள். மத மூடநம்பிக்கைச் சின்னங்களான வண்ணக் கயிறுகளும் நெற்றியில் விபூதி குங்குமமும் கட்சிக்காரர்களின் கட்டாய அடிப்படை அடையாளமாக்கப்பட்டுவிட்டன.

அரசியல் சீரழிந்து விட்டது; பொது வாழ்க்கையில் நேர்மையில்லை; திராவிடக் கட்சிகள் நாட்டை சீர்குலைத்து விட்டன என்று குற்றச்சாட்டுகளை முன் வைத்து அரசியல் நடத்தும் கட்சிகளானாலும் சரி; புரட்சி பேசும் இயக்கங்களானாலும் சரி; பார்ப்பனிய ஊடகங்களும் சரி; தி.மு.க.வை மட்டுமே குறி வைத்து தாக்குதல்களை நடத்துகின்றன. அ.இ.அ.தி.மு.க.வில் நடக்கும் ‘உலகமகா சீர்கேடுகள்’ குறித்து ஒரு கண்டனத்தைக்கூட தெரிவிப்பது இல்லை. ஒவ்வொரு நாளும் அரசு தரும் விளம்பரங்களுக்காக ஊடகங்கள் அரசு எதிர்ப்பைவிட எதிர்கட்சியான தி.மு.க. எதிர்ப்பிலேயே தீவிரம் காட்டி வருகின்றன.

‘ஊழல் – நேர்மை – சிறந்த ஆட்சி’ என்பவற்றிற்கு புதிய அகராதிகளை பார்ப்பனர்களே இப்போதும் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். வேத காலத்தில் தொடங்கிய இவர்களின் சூழ்ச்சி – சுயநல ஆதிக்க அரசியல் இப்போதும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது.

## தமிழகத்தின் 48 கேந்திர வித்தியாலயாவில் தமிழோ தமிழாசிரியரோ இல்லை

தமிழ்நாட்டில் மத்திய அரசின் 48 கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் உள்ளன. இங்கே இந்தியும் சமஸ்கிருதமும் கட்டாயம். சமஸ்கிருதம் படித்து தேர்ச்சி பெற்றால் மட்டுமே 6ஆம் வகுப்பிலிருந்து 7ஆம் வகுப்புக்கு செல்ல முடியும். அது மட்டுமல்ல, சமஸ்கிருதத்துக்கு பதிலாக தமிழைப் பாட மொழியாக தமிழ்நாட்டு மாணவர்கள் ஏற்று படிக்கவும் முடியாது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இந்த உண்மைகள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. இந்த கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தமிழ் விருப்பப் பாடமாக கற்பிக்கப்படுகிறது என்று மத்திய அரசின் வழக்கறிஞர் சென்னை உயர்நீதி மன்றத்தில் கூறினார். தமிழ் ஏன் விருப்பப் பாடமாக இருக்க வேண்டும்? பிரெஞ்சு, ஜெர்மன், வங்காளம் உள்ளிட்ட மொழி களைக் கற்கலாம். தமிழ் மொழியை கற்கக் கூடாதா என்று நீதிபதிகளே கேட்டனர்.

தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் இந்தி, சமஸ்கிருதத் திணிப்பைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையில் இந்தி பேசும் மாநிலங்களில் இந்தி கற்றுக் கொடுக்க மாட்டோம்; இந்தி ஆசிரிர்களை நியமிக்க மாட்டோம் என்று சொல்லிவிட முடியுமா? என்று கேட்டுள்ளார். கேந்திர வித்யாலயா பள்ளிகளில் தமிழாசிரியர்களே நியமிக்கப் படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


## குமாரபாளையத்தில் நடந்த சரண்யா– நந்தகுமார் மணவிழா



நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் பகுதியைச் சேர்ந்த இ.சரண்யா - ச.நந்தகுமார் இணையரின் சுயமரியாதை திருமணம் 05.02.2021 அன்று காலை 11 மணியளவில் குமாரபாளையம் பெரியார் படிப்பகத்தில் நடைபெற்றது. திருமணத்திற்கு திராவிடர் விடுதலைக் கழக குமாரபாளையம் நகரத் தலைவர் மீ.த. தண்டபாணி தலைமையில், கழகத்தின் நாமக்கல் மாவட்டத் தலைவர் மு.சாமிநாதன் உறுதிமொழி கூறி சுயமரி யாதை திருமணத்தை நடத்தி வைத்தார். நிகழ்வில், நாமக்கல் மாவட்ட செயலாளர் மு.சரவணன், மாவட்ட அமைப்பாளர் அ.முத்துப்பாண்டி மற்றும் கழகத் தோழர்களும் கலந்து கொண்டனர்.

வாழ்விணையர்கள் சார்பாக புரட்சி பெரியார் முழக்கத்திற்கு நன்கொடையாக ரூ.1000 வழங்கப்பட்டது.

## அரசியல் நிலை



யோக்கியர்களே அரசியல் பொது வாழ்வுக்கு வரும்படியான நிலையை இன்னமும் நம்முடைய நாடு எய்தவில்லை. பணக்காரனுக்குப் போனது போக மீதிதான் பணக்காரன் அல்லாதவர்களுக்குக் கிடைக்கிறது. அப்படி மற்றவர்களுக்கு கிடைக்கும் ஸ்தானங்களும் பணக்காரத் தன்மைக்கு எவ்வளவு அயோக்கியத்தனம், நாணயக்குறைவு, துரோக புத்தி வேண்டி இருக்கிறதோ அவ்வளவும், அதற்கு மேலும் உள்ளவர்களுக்குத்தான் பெரிதும் கிடைக்கிற மாதிரியில் இருக்கிறது. ஏதோ சிலர் யோக்கியர்களும் இருக்க நேரலாம்; என்றாலும் அவர்கள், யோக்கியமாய் நடந்து கொள்ள முடியாத சூழ்நிலையும், யோக்கியமாய் நடந்தாலும் பயன் ஏற்படாத சூழ்நிலையும், இருந்துவருவதால் யோக்கியமாய் நடந்து கொள்வது முட்டாள்தனம் என்று கருதும்படியாக நேரிட்டுவிடுகிறது.

**‘விடுதலை’** 23.07.1952

# ‘தேச துரோகச் சட்டம்’ நீடிக்கக் கூடாது

- பத்திரிகையாளர்கள் மீது தேச துரோகச் சட்டத்தை ஏவுகிறது பா.ஜ.க. ஆட்சி.
- பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட சட்டம் இப்போது அந்த நாட்டிலேயே நீக்கப்பட்டு விட்டது.
- அரசியலமைப்பு சபையில் கடும் எதிர்ப்பால் புறக்கணிக்கப்பட்ட இந்த சட்டப் பிரிவு, பிறகு தண்டனைச் சட்டத்தில் திடீரென்று நுழைந்தது.

*விவசாயிகள் பேரணி குறித்தும், அதன் தொடர்ச்சியாக நிகழ்ந்த வன்முறைகள் குறித்தும் செய்தி வெளியிட்ட பத்திரிகையாளர்கள் மீது, வழக்கு போடபப்பட் டுள்ளது. ‘இந்தியா டுடே’ வின் ராஜ்தீப் சர்தேசாய், ‘நேஷனல் ஹெரால்டு’ இதழின் மூத்த ஆசிரியர் மிருணாள் பாண்டே, ‘குவாமி ஆவாஸ்’ ஆசிரியர் ஜாஃபர் ஆகா, ‘கேரவன்’ இதழின் நிறுவனர் மற்றும் ஆசிரியர் பரேஷ் நாத், அதே இதழின் ஆனந்த் நாத், வினோத் கே.ஜோஸ் ஆகியோர் மீது வழக்குகள் பாய்ந்துள்ளன. தேச துரோகம், வகுப்புவாத அமைதி யின்மையைத் தூண்டுதல், மத நம்பிக்கைகளை அவமதித்தல் உள்ளிட்ட பல பிரிவுகளில் ஒரே நேரத்தில் அய்ந்து மாநிலங்களில் ஒரே மாதிரியான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.*

*போராட்டத்தில் பங்கேற்ற ஒருவர் மரணமடைந்த விதம் குறித்து சமூக வலைதளப் பக்கங்களில் எழுதிய பத்திரிக்கையாளர்களே குறிவைக்கப்பட்டுள்ளனர். ஆரம்பகட்டத் தகவல்களை வைத்து, ‘அவர் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்’ என்று குறிப்பிட்ட ராஜ்தீப் சர்தேசாய், ‘அந்த விவசாயி டிராக்டர் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதினால்தான் இறந்தார்’ என போலீசார் வெளியிட்ட வீடியோவை யும் உடனே பகிர்ந்தார்.*

*பொய்களிலிருந்து உண்மையைப் பிரித்தறிய முடியாத அளவுக்கு வதந்திகள் பலவும் செய்திகளைப் போலவே வேடமணிந்து வரும் சமூக வலைதள யுகம் இது. இந்தச் சூழல், பத்திரிக்கையாளர்கள் பலரையும் ஏமாற்றிவிடுகிறது. ஒரு போராட்டம் நடைபெறும் நேரத்தில், அதில் நிகழும் பல்வேறு சம்பவங்களைப் பத்திரிக்கையாளர்கள் பதிவு செய்வது இயல்பே! சம்பவங்களை நேரில் பார்ப்பவர்கள் மற்றும் காவல்துறையினர் தரும் தகவல்களை அடிப்படையாக வைத்தே இதைப் பத்திரிக்கையாளர்கள் செய் கிறார்கள். இதில் தவறுகள் நேர்வது இயல்பு. அதைத் திருத்திக் கொள்வதும் இயல்பே!*

*இந்தப் பத்திரிக்கையாளர்கள் எழுதிய ட்வீட்கள் உள்நோக்கத்துடன் தீங்கிழைக்கும் வகையில் இருந்தன. போராட்டக்காரர்கள் செங்கோட்டையை முற்றுகையிட அதுவே காரணம்’ என்றும் முதல் தகவல் அறிக்கை குற்றம்சாட்டுகிறது. உறுதி செய்யப்படாத ஒரு தகவலை எழுதுவது என்பது தேச துரோகமா ? நிச்சயம் இல்லை.*

குடியுரிமை சட்டத்திருத்தத்தை எதிர்த்து போராடியவர்கள், பண மதிப்பழிப்பு நடவடிக்கையை கண்டித்தவர்கள், ஜிஎஸ்டியை எதிர்த்தவர்கள், இப்போது டெல்லியில் நடந்துவரும் விவசாயிகள் போராட்டத்தை ஆதரிப்பவர்கள் என பாஜக ஆட்சியின் மக்கள் விரோத செயல்பாடுகளை எதிர்த்து குரல் கொடுப்பவர்கள் எல்லோருக்கும் சங்கிகளால் தவறாமல் கிடைத்துவரும் பட்டம் “தேச துரோகி”.

இப்போது மட்டுமல்ல காலங்காலமாக, அரசின் அடக்குமுறைகள், மக்கள் விரோத சட்ட திட்டங்களை எதிர்த்து குரல் கொடுப்பவர்கள் மீது பயன்படுத்துகிற சொல்லாகவே “தேச துரோகம்” என்பது உள்ளது. இதன்பெயரால் உருவாக்கப் பட்டுள்ள தேச துரோக சட்டம் சமூக நலன் சார்ந்த போராளிகளை சிறையில் அடைக்கவும், அவர்களின் படைப்புகளை முடக்கவுமே பயன்பட்டு வருகிறது. இந்தியாவில் காலனிய ஆட்சிக்காலத்தில் கொண்டு வரப்பட்ட தேச துரோக சட்டம் குறித்து இப்போதும் தீராத விவாதங்களும், அடுக்கடுக்கான கேள்விகளும் இருந்துகொண்டுதான் இருக்கின்றன.

உரிமைக்கான குரல்களை ஒடுக்குவதற்கான காலனிய ஆட்சிக்கால சட்டம் இந்தியாவில் இன்ன மும் நடைமுறையில் இருந்தாலும், இங்கிலாந்தில் இச்சட்டம் இப்போது நடைமுறையில் இல்லை. இந்த சட்டம் குறித்து இங்கிலாந்திலும் நீண்ட காலமாக விவாதங்கள் நடந்து வந்தது. பேச்சுரிமை ஜனநாயகத்தின் சிறப்பம்சம், தனிநபர்கள் அரசின் மீது வைக்கும் விமர்சனமே சுதந்திரத்தைப் பாதுகாக்கும் எனக் குறிப்பிட்டு, தேசதுரோக சட்டத்தை நீக்க 1977 ஆம் ஆண்டில் பிரிட்டன் சட்ட ஆணையமே பரிந்துரைத்தது.

கருத்து சுதந்திரம் ஒரு உரிமையாக இல்லாத காலத்தில் உருவாக்கப்பட்ட இச்சட்டம் தற்போதும் நடைமுறையில் இருப்பது நியாயமற்றது என்ற அடிப்படையில் 2009ஆம் ஆண்டில் தேசதுரோக சட்டத்தை இங்கிலாந்து நீக்கியது.

### இந்தியாவில் தேச துரோக சட்டத்தின் வரலாறு

1837ஆம் ஆண்டில் குற்றவியல் நடைமுறை சட்டத்தின் உட்பிரிவுகளில் ஒன்றாக தேசதுரோகம் என்பதையும் இணைப்பது, தாமஸ் பாபிங்டன் மெக்காவின் வரைவறிக்கையில் இடம் பெற்றிருந்தது. ஆனால் 20 ஆண்டுகளுக்கும் மேலாக கிடப்பில் கிடந்த அந்த மசோதா 1860ஆம் ஆண்டில் அமலுக்கு வந்தாலும், கணக்கிலடங்கா தவறுகளை கொண் டிருந்ததால் நிறுத்தி வைக்கப்பட்டது. இருப்பினும் பத்தாண்டுகளுக்கு பிறகு 1870இல் சிறப்புச் சட்டம் மூலம் மெக்காலேவின் சட்ட வரைவு நடைமுறைக்கு வந்தது. அரசாங்கத்தின் மீதான அதிருப்தி உணர்வு களை தூண்டுவதை தண்டிப்பதே இந்த சட்டத்தின் அடிப்படை நோக்கமாக இருந்தது. ஆங்கிலேயர் களுக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தின் பேச்சுரிமை மற்றும் எழுத்துரிமைகளை நசுக்கு வதற்கான கருவியாக இச்சட்டம் பயன்பட்டது.

ஆனால் இங்கிலாந்தில் நடைமுறையில் உள்ள ஒரு சட்டம் இந்தியாவிற்கும் அப்படியே பொருந்தும் என்பதை கேள்விக்குட்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்தியாவில் நிலவும் சமூக நிலைகளும், இங்கிலாந்தில் நிலவும் சமூக நிலைகளும் ஒன்றாக இல்லை என்பதே அதற்கு முக்கியக் காரணம்.

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் அலி சகோதரர்கள், காந்தி, அன்னி பெசண்ட் போன்றோர் இச்சட்டத்தில் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். 1947க்கு பின்பு இதுவரையில் கணக்கிலடங்காதோர் தேசதுரோக சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த மாதம் ஜனவரி 26ஆம் தேதி டெல்லியில் விவசாயிகள் நடத்திய டிராக்டர் பேரணியில் நிகழ்ந்த வன்முறை தொடர்பாக செய்தி சேகரித்த பத்திரிகையாளர்கள், விவசாயிகள் மற்றும் காங்கிரஸ் எம்.பி. சசிதரூர் உள்ளிட்ட பலர் மீது தேசதுரோக வழக்குப் பதியப் பட்டுள்ளது. பீமா கோரேகான் விவகாரம், குடி யுரிமை திருத்த சட்டத்திற்கு எதிரான போராட்டம், தமிழகத்தில் தூத்துக்குடி ஸ்டெர்லைட் போராட் டம், கூடங்குளம் அணு உலை போராட்டம் உள்ளிட்டவற்றில் ஏராளமானோர் மீது தேசதுரோக வழக்கு பதியப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்த சட்டம் குறித்த கே.எம்.முன்ஷி யின் கருத்தை அறிவது அவசியமாகிறது. 1948ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் வரைவறிக்கை வெளியானது. அதே ஆண்டு அக்டோபர் மாதத்தில் திருத்தங்களுடன் அரசியலமைப்பு வரைவறிக்கையின் மறு பதிப்பு வெளியானது.

அதனைத் தொடர்ந்து டிசம்பர் மாதத்தில், அரசியலமைப்பு நிர்ணய சபையானது “அவதூறுகள்” குறித்து விவாதித்தது. அப்போது தேசதுரோகம் என்ற வார்த்தையை அரசியலமைப் பில் இருந்து நீக்குவதற்கான திருத்தத்தை கே.எம்.முன்ஷி முன்மொழிந்தார். தேசதுரோகம் என்ற வார்த்தைக்குப் பதிலாக வேறொரு சொற் றொடரைப் பயன்படுத்த வேண்டுமென்பது அவருடைய வாதம். இந்த வார்த்தை அரசின் பாதுகாப்பை கேள்விட்குட்படுத்துவதாக உள்ளது என்றார்.

150 ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்தில் அரசுக்கு எதிராக கூட்டம் நடத்துவதோ, ஊர்வலம் செல்வதோ கூட தேசதுரோகமாக இருந்தது. அரசுக்கு எதிரான கருத்தை முன்வைப்பது கூட தேச துரோகமாக கருதப்பட்டது என்பதையும் கே.எம்.முன்ஷி குறிப்பிட்டார். ஜனநாயகத்தின் அடிப்படையே அரசாங்கத்தின் மீதான விமர்சனம்தான் என்பது அவரது கருத்து. அரசியல் நிர்ணய சபை ஒருமனதாக இதனை ஏற்று, தேசதுரோக சட்டப்பிரிவு 124-ஏ-வை நீக்கியது. இது அரசின் மீதான அதிருப்தி உணர்வுகளை வெளிப்படுத்த உரிமை உண்டு என்பதை உணர்த்துவதாகவே இருந்தது.

ஆனால் பின்னாளில் அரசியலமைப்பு நிர்ணய சபையின் இந்த முக்கிய விவாதங்கள், காற்றில் பறக்கவிடப்பட்டு தேச துரோக சட்டம் மீண்டும் தண்டனை சட்டத்தில் இணைக்கப்பட்டது. இது தொடர்பான 2 முக்கியமான வழக்குகளில், உச்சநீதி மன்றம் எப்படி முரணான நிலைப்பாடுகளை எடுத்தது என்பதை 2 உதாரணங்களின் மூலம் புரிந்து கொள்ளலாம்.

சென்னை மாகாணத்தில் இருந்து வெளியான ”கிராஸ் ரோட்ஸ்” என்ற இதழை காங்கிரஸ் அரசு தடை செய்தது. இடதுசாரி சிந்தனையாளர் ரோமெஷ் தாப்பர் நடத்திய இவ்விதழில் காங்கிரஸ் அரசு மீதான விமர்சனங்கள் இருந்ததே தடைக்கு காரணமாக இருந்தது. இதனை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் அவர் தொடர்ந்த வழக்கில், 1950ஆம் ஆண்டு மே 16ஆம் தேதி தீர்ப்பு வழங்கப்பட்டது. 5 நீதிபதிகள் கொண்ட அமர்வு, அரசின் நடவடிக்கை அரசியலமைப்புக்கு விரோதமானது என தீர்ப்பளித்தது. நீதிபதி ஃபசல் அலி, கிராஸ் ரோட்ஸ் இதழுக்கு தடை விதித்த அரசின் நடவடிக்கைக்கு அதிருப்தி தெரிவித்தார்.

ஆனால் 1962ஆம் ஆண்டில் கேதர்நாத் சிங் வழக்கில், உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தேச துரோக சட்டத்தை இந்தியாவில் மீண்டும் நுழைத்தது. ஒருவரின் கருத்து உடனடியாக பொது அமைதியை சீர்குலைத்தாலோ அல்லது வன் முறையைத் தூண்டினாலோ காலனிய ஆட்சிக்கால சட்டப்பிரிவு 124-ஏ பயன்படுத்தலாம் என 5 பேர் கொண்ட உச்சநீதிமன்ற அமர்வு தீர்ப்பளித்தது. ஆனால் கருத்துரிமையை கட்டுப்படுத்த இப்பிரிவை பயன்படுத்தக்கூடாது என்றும், இப்பிரிவின் கீழ் வழக்குப்பதியும்போது இத்தீர்ப்பை கருத்தில் கொள்ளவும் அறுவுறுத்தியது.

ரோமெஷ் தாப்பர் வழக்கில், அரசின் நடவடிக்கை செல்லாது என தீர்ப்பளித்த 5 பேர் கொண்ட அமர்வில் ஒருவராக இருந்த நீதிபதி எஸ்.ஆர்.தாஸ், இந்த அமர்விலும் இடம்பெற்றிருந்தார். இப்பிரிவின் கீழ் வழக்குப்பதியும்போது, இந்த தீர்ப்பின் உத்தரவை கடைப்பிடிக்க வேண்டுமென்றும் நீதிபதிகள் அறிவுறுத்தினர். ஆனால் அன்றுமுதல் இன்றுவரை அடக்குமுறைக் கருவியாகவே இச்சட்டம் ஏவப்படு வதும், அதன்பிறகு பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றங்களில் நீண்ட சட்டப் போராட்டம் நடத்தி விடுதலை பெறுவதும் முடிவில்லாத தொடர் கதையாகிவிட்டது.

‘தேச துரோகச் சட்டத்தை உண்மையிலேயே நாட்டுக்கு விரோதமாக நடக்கும் செயல்களில் மட்டுமே பயன்படுத்த வேண்டும். யாரோ சிலர் இங்கும் அங்கும் சில கோஷங்களை எழுப்புவ தெல்லாம் தேசவிரோதம் ஆகிவிடாது’ எனக் கடந்த 1995ஆம் ஆண்டு பல்வந்த் சிங் வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியது. 2016 செப்டம்பரில் ஒரு தீர்ப்பில், இந்தச் சட்டப் பிரிவைப் பயன்படுத்தும்போது கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு நெறிகளையும் விவரித்தது. ஆனால் அவற்றை யாரும் பின்பற்ற வில்லை. கடந்த 2018ஆம் ஆண்டில் சட்ட ஆணையம் இந்த இ.பி.கோ 124(A) பிரிவை நீக்குவதற்குப் பரிந்துரை செய்தது. அல்லது ‘அரசுக்கு எதிராகக் கலவரங்கள் மற்றும் சட்டவிரோதச் செயல்களைச் செய்பவர்கள் மீது மட்டுமே இந்தச் சட்டப்பிரிவு பயன்படுத்தப்பட வேண்டும்’ என்று யோசனை சொன்னது.

டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் போராடிய மாணவர்கள், குடியுரிமைச் சட்டத்துக்கு எதிராகப் போராடியவர்கள் ஆகியோர் வரிசையில் இப்போது பத்திரிக்கையாளர் மீதும் வழக்கு.

‘இப்படி வழக்கு பதிவுசெய்வது, பத்திரிக்கை யாளர்களை அச்சுறுத்தும் முயற்சி’ என இந்தியப் பத்திரிகை ஆசிரியர்கள் சம்மேளனம் வன்மையாகக் கண்டித்துள்ளது. இந்திய பிரஸ் கிளப் தலைவர் ஆனந்த் சஹாய், “எமர்ஜென்சி காலத்தில்கூட பத்திரிக்கையாளர்கள் இவ்வளவு கடுமையாக நடத்தப்பட்டது இல்லை. உத்திரப்பிரதேசம், மணிப்பூர், குஜராத், மகாராஷ்டிரா எனப் பல மாநிலங்களில் சமீப காலங்களில் இப்படிப் பத்திரிக்கையாளர்கள் மீது தேச துரோக வழக்கு போடுவது அதிகரித்துள்ளது” என்கிறார்.

பட்ஜெட் தாக்கல் செய்யும்போதுகூட பிரிட்டிஷ் கால முறைப்படி நாங்கள் இனி பட்ஜெட் தாக்கல் செய்ய மாட்டோம், வழக்கமான முறையில் சூட்கேஸில் பட்ஜெட் ஆவணங்களை எடுத்துவரும் முறையை கடைபிடிக்க மாட்டோம் என பாஜக அரசு கூறி வருகிறது. அவர்கள் எண்ணப்படியே கொரோனாவை காரணம் காட்டி பட்ஜெட் உரை அச்சிடுவதை தவிர்த்து, சூட்கேஸ் எடுத்துவரும் வழக்கத்தை விட்டுவிட்டார்கள். ஆனால் காலனிய ஆட்சியில் கொண்டுவரப்பட்ட ஒடுக்குமுறைச் சட்டத்தை நீக்குவோம், அது இந்தியாவுக்கு தேவை யில்லை என இவர்கள் ஒருபோதும் கூற மாட்டார்கள்.

**– பிரகாஷ்**

**(தகவல் ஆதாரம்: ‘பிரன்ட்ரைன்’ இதழில் ஏ.ஜி. நூரானி எழுதிய கட்டுரை)**

# 170 தொழிலாளர்கள் பலியானது ஏன்?

உத்தரகாண்ட்டில் சூழலைக் கெடுக்கும் மின் திட்டங்களை அனுமதித்ததாலேயே பேரழிவு.

உத்தரகாண்ட் மாநிலம் சமோலி மாவட்டத்தில் பனிப்பாறை வழக்கத்துக்கு மாறாக உடைந்து உருகியிருக்கிறது. இதன் காரணமாக இரண்டு ஆறுகளில் வெள்ளப் பெருக்கு. ரேனி எனும் கிராமத்தில் அமைக்கப்பட்டு வந்த ரிஷிகங்கா நீர் மின் திட்ட, கட்டுமானங்கள் முழுமையாக ஆற்று நீரில் அடித்துச் செல்லப்பட்டதோடு, கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களும் அடித்துச் செல்லப்பட்டு விட்டனர். மற்றொரு நீரியல் மின் திட்டமான ‘தபோவன்’ திட்டம் பாதியளவு நீரில் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. 31 பேர் உடல்கள் மட்டுமே கண்டெடுக்கப்பட்டுள்ளன. தொழிலாளர்கள் 170 பேர் பலியாகிவிட்டனர். இவர்கள் உ.பி., பீகார் மாநிலங்களைச் சார்ந்த தொழிலாளர்கள்.

பனிப்பாறைகளைக் கொண்ட பகுதியில் ரிஷி கங்கா மின் திட்டத்தை அமைப்பது கடுமையான இயற்கை சீரழிவுகளை உருவாக்கிவிடும் என்று உள்ளூர் கிராம மக்கள் தொடர்ந்து எதிர்த்து வருகிறார்கள். 2019இல் இந்த கிராமத்தைச் சார்ந்த குந்தன் கிங் - உத்தரகாண்ட் உயர்நீதிமன்றத்தில் ஆபத்தான இந்தத் திட்டத்தை அனுமதிக்கக் கூடாது என்று பொது நலன் வழக்கு தொடர்ந்தார். இத் திட்டம் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த நிறுவனம் திட்டத்துக்கு சுரங்கம் அமைக்க மலைகளை உடைக்க வெடி மருந்துகளைப் பயன்படுத்துவதால் நந்தாதேவி உயிர் வனவிலங்கு சரணாலயத்தையும் பனிப்பாறைகள் மிகுந்த சுற்றுச் சூழலையும் கடுமையாகப் பாதித்து ஆபத்துகளை உருவாக்கிவிடும் என்று மனுதாரர் தமது மனுவில் குறிப்பிட்டிருந்தார். திட்டத்தின் கழிவுகள் ரிஷிகங்கா நதியில் கொட்டப்படுவதற்கு கிராம மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தாலும் தனியார் நிறுவனம் பொருட்படுத்தவில்லை. பாறைகளை உடைப்பதற்கு அரசு விதித்துள்ள நெறிமுறைகளும் பின்பற்றப்படவில்லை என்று மனுதாரர் சுட்டிக் காட்டியிருந்தார். மனுவை விசாரணைக்கு ஏற்ற உயர்நீதிமன்றம், பாறைகளை உடைப்பதற்கு வெடி மருந்துகளைப் பயன்படுத்த தடை விதித்ததோடு, மாசு கட்டுப்பாட்டு வாரிய செயலாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கொண்ட ஓர் ஆய்வுக் குழுவை உருவாக்கி, திட்டப் பணிகளை நேரில் சென்று ஆய்வு செய்ய உத்தரவிட்டது. கமிட்டி தனது அறிக்கையில் குறிப்பிட்ட கட்டுமான நிறுவனம், சட்ட விரோதமான முறைகளைப் பயன்படுத்தியிருக்கிறது. மலைகளை உடைத்திருக்கிறது என்பதற்கு ஆதாரம் இல்லை என்று அறிக்கை சமர்ப்பித்து விட்டது. வழக்கு விசாரணை அப்படியே கிடப்பில் போடப்பட்ட நிலையில் இந்த கோர விபத்து நடந்து முடிந்துள்ளது.

கட்டுமானப் பணிகள் 60 சதவீதம் முடிவடைந்த நிலையில் முழுதும் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டுள்ளது. 450 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டு இமயமலை சுற்றுச் சூழலியல் ஆய்வு மய்யத்தைச் சார்ந்த விஞ்ஞானிகள், மின் திட்டங்கள் எதையும் இந்தப் பகுதியில் அமைக்க முயல்வது கடும் பாதிப்புகளை உருவாக்கும் என்று எச்சரித்திருந்தனர். ஆனால் அரசு இந்த எச்சரிக்கையை மீறி திட்டங்களுக்கு அனுமதித் தந்தது என்று மூத்த விஞ்ஞானி பிரதீப் சிறீவத்சவா ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேட்டுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

# சமூக நீதிக்கு எதிராக தனியார் துறை ஆர்.எஸ்.எஸ். அதிகாரிகளை குறுக்கு வழியில் அரசு பதவியில் அமர்த்தும் ஆபத்து: ஸ்டாலின் கண்டனம்

“சமூகநீதியைச் சீர்குலைக்கும் வகையில் மத்திய அரசின் முக்கிய துறைகளில் இணைச் செயலாளர் பதவிகளுக்குத் தனியார் துறையிலிருந்து 30 பேரை நியமிக்க முடிவு செய்திருப்பதற்கு கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய கல்விக் கொள்கை, நீட் தேர்வு, வங்கித் தேர்வுகள், யூபிஎஸ்சி தேர்வுகள், ரயில்வே தேர்வுகள், தபால் தந்தி இலாகா உள்ளிட்ட மத்திய அரசின் துறைகளுக்கு நடைபெறும் பல்வேறு தேர்வுகள் ஆகியவற்றில், ஏற்கெனவே சமூகநீதிக்குச் சாவுமணி அடித்து, போதாக்குறைக்குப் பொருளாதாரத்தில் பின்தங்கிய முன்னேறிய பிரிவினருக்கு மின்னல் வேகத்தில் 10 சதவீத இடஒதுக்கீடு அளித்து, இந்நாட்டின் நிர்வாகத்தில் இதர பிற்படுத்தப்பட்ட, பட்டியலின, பழங்குடியின இளைஞர்கள் பங்கேற்க உரிமையில்லை என்று இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராகவே மத்திய பாஜக அரசு செயல்பட்டு வருகிறது.

இந்திய வரலாற்றில், சமூகநீதிக்கும் இடஒதுக்கீட்டுக் கொள்கைக்கும் முற்றிலும் எதிரான இப்படியொரு அரசு இப்போது பாஜக தலைமையில் அமைந்திருக்கிறது என்பது, நாட்டுக்கு ஏற்பட்டிருக்கும் கேடு. இதன் அடுத்த கட்டமாகவே, தற்போது இணைச் செயலாளர்கள், கூடுதல் செயலாளர்கள் உள்ளிட்ட பதவிகளுக்குத் தனியார் நிறுவனங்களில் இருந்து ஆட்களை, அதுவும் பாஜக - ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தில் ஊறிப் போனவர்களை மத்திய அரசின் துறைகளுக்கு அழைத்து வந்து, எஞ்சியிருக்கும் சமூகநீதிக் கட்டமைப்பையும் தகர்க்க, பிற்படுத்தப்பட்ட சமுதாயம் என்று தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ளும் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு செய்வது மிகுந்த வேதனையளிக்கிறது.

தனியார் துறையிலிருந்து நியமனம் செய்யப்படும் போது இடஒதுக்கீட்டுக் கொள்கை தூக்கி எறியப்படும். அப்படி நியமிக்கப்படுவோர் அவர்களின் சித்தாந்தத்தில் உள்ளவர்களை அரசுத் துறைகளில் சேர்த்து விடுவார்கள்.

பத்து சதவீத இடஒதுக்கீடு போதாது என்று இப்படிக் குறுக்கு வழியிலும் இடஒதுக்கீட்டுக் கொள்கையைச் சீரழிக்க நடக்கும் இந்த முயற்சிகளைத் திமுக ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாது. இது கார்ப்பரேட் ஆட்சி என்பதால், பொதுத் துறை நிறுவனங்கள் தனியாருக்குத் தாரை வார்ப்பு என்று தொடங்கி, அது பேயாட்டம் போட்டுக் கொண்டிருக்கின்ற நேரத்தில், மத்திய அரசின் துறைகளையும் தனியார்மயமாக்கும் இந்த முடிவு அரசியல் சட்டத்திற்கே விரோதமானது.

அதுமட்டுமின்றி, மத்திய அரசு அலுவலகங்களில் தப்பித் தவறி பணியில் அமர்த்தப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்ட, பட்டியலின, பழங் குடியின அலுவலர்கள், அதிகாரிகள் ஆகியோருக்கு உயர் பதவிகளை எட்டாக் கனியாக்கி, அனைத்திலும் முன்னேறிய வகுப்பினரும் கார்ப்பரேட்டுகளுக்கு வேண்டியவர்களும் ஆக்கிரமித்துக் கொள்வதற்கே வழி வகுக்கும்!

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049
newsdvk@gmail.com

# கவிக்கொண்டல் மா. செங்குட்டுவன் முடிவெய்தினார்



திராவிட இயக்க மூத்த பத்திரிகையாளர் கவிக்கொண்டல் மா. செங்குட்டுவன் தனது 95ஆவது வயதில் சென்னையில் பிப்.5 அன்று முடிவெய்தினார். 70 ஆண்டுகாலம் திராவிட இயக்க இதழ்களில் பணியாற்றிய பெருமைக்குரிய அவர், தி.மு.க. தொடங்கப்பட்ட 1949 செப்டம்பர் 17இல் நடந்த அதன் அமைப்புக் கூட்டத்தில் பங்கேற்ற 150 பேரில் ஒருவராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. மாலைமணி, விடுதலை, நம்நாடு உள்ளிட்ட நாளேடுகளில் பணியாற்றியதோடு, ‘எழுச்சி’, ‘கவிக்கொண்டல்’ என்ற இதழ்களையும் நடத்தினார். சீரிய பகுத்தறிவாளர். அவரது முழுமையான திராவிட இயக்கப் பயணத்தை ‘நிமிர்வோம்’ மாத இதழ் (2017, டிசம்பர்) விரிவாக அவருடன் நேர்காணல் நடத்திப் பதிவு செய்துள்ளது. அவரது தன் வரலாற்றுச் சுருக்கமாக உள்ள ஒரே ஆவணமாக ‘நிமிர்வோம்’ நேர்காணல் உள்ளது. தனது குறிப்பிடத்தக்க சாதனைகளாக ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழுக்கு (டிச. 24, 2020) அவர் எழுதிய கடிதம் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழ் பதிவு செய்துள்ளது. ‘கவிக்கொண்டல்’ என்ற கவிதை இலக்கிய மாத இதழைப் பல ஆண்டுகாலம் தனது வாழ்நாள் இறுதி வரை நடத்தியவர் கவிக்கொண்டல் மா. செங்குட்டுவன்.

# மா.வேழவேந்தன் இல்ல ஜாதி-மத மறுப்பு மணவிழா



சென்னை மாவட்ட கழகத் தலைவர் வேழ வேந்தன் - பேபி இணையரின் மகள் இளவரசி - ஆம்பூர் முபீன் வாழ்க்கை ஒப்பந்த நிகழ்வு 3.2.2021 அன்று சென்னை இராயப்பேட்டை பகல் 11 மணியளவில் நடந்தது. இது ஜாதி-மத மறுப்பு திருமணமாகும். மண விழாவில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பேராசிரியர் சரசுவதி பங்கேற்று வாழ்த்தினர். சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் பங்கேற்றனர். மணவிழா மகிழ்வாக கழக ஏட்டுக்கு நன் கொடையாக ரூ.5,000/- பொதுச்செயலாளரிடம் வேழவேந்தன் வழங்கினார்.

## வினா விடை

- சசிகலா வரவேற்பு; சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற அமைச்சர்கள் காவல்துறை இயக்குனரிடம் மனு. **– செய்தி**

  அடுத்து காவல்துறை இயக்குனர் ‘கான்ஸ்டபிளை’ நேரில் சந்தித்து ‘சல்யூட்’ அடித்து, மனு கொடுப்பார் போல!

- ரூ.250 கட்டினால் பழனி கோயில் பிரசாதம் அஞ்சல் துறை மூலம் வீடு தேடி வரும். **– அறநிலையத் துறை அமைச்சர்**

  பக்தியை இப்படியே அமேசான் ‘ஆன் லைன்’ சேவைகளாக்கி விட்டால், கோயில்களையே இழுத்து மூடி விடலாம்! சபாஷ்! பகுத்தறிவு பக்திக்குள்ளும் நுழைஞ்சுட்டுதே!

- 7 பேர் விடுதலையில் குடியரசுத் தலைவர் முடிவு எடுப்பார். **– தமிழக ஆளுநர்**

  அதாவது, ‘எந்த முடிவும் எடுக்க மாட்டேன்’ என்ற முடிவை எடுப்பார்; அப்படித் தானே! நல்ல முடிவு!

- கடந்த 5 ஆண்டுகளில் சாக்கடைக் குழியில் மனிதக் கழிவுகளை அகற்றும்போது 340 பேர் உயிரிழந்துள்ளனர். **– செய்தி**

  அதனால் என்ன? ‘ஸ்வச் பாரத்’ திட்டத்துக்கு எதிராக தீவிரவாதிகள் சதின்னு அறிவிச்சுடலாம்!

- போராடும் விவசாயிகளுடன் பேசத் தயார். **– மோடி**

  அடேங்கப்பா... விவசாயிகள் போராட்டம் நடக்குதுன்னு, பிரதமர் தெரிஞ்சு வச்சிருக்காரே! கெட்டிக்கார மனிதர்!

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 12th February 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN